# மருத்துவம் பயிலவிருக்கும் முதல் 'ஐடிஇ' பட்டதாரி



சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் யோங் லூ மருத்துவப் பள்ளியில் சேர்ந்து பயிலவிருக்கும் முதல் தொழில்நுட்பக் கல்விக் கழகப் பட்டதாரி எனும் பெருமையைப் பெறுகிறார் 23 வயதான நிக்கலஸ் சான் (படம்).

பீஷான் பார்க் உயர்நிலைப் பள்ளியில் பயின்றபோது பள்ளிக்கு ஒழுங்காகச் செல்லாத திரு சான், பின் உயர்நிலைப் பள்ளியிலிருந்து வெளியேறினார். பிறகு தனிப்பட்ட விதத்தில் 'ஓ' நிலைத் தேர்வு எழுதி, பிறகு 'ஐடிஇ'யில் தாதிமை பயின்று, அதன்பின் நன்யாங் பலதுறைத் தொழிற்கல்லூரியில் பட்டயம் பெற்றார்.

"தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் நுழைந்த தருணத்தில், 'இதுவே எனக்கான இறுதி வாய்ப்பு' எனக் கூறிக் கொண்டேன்," என்றார் இவர்.

'ஐடிஇ'ல் சராசரியாக 3.65 தரப்புள்ளிகளையும் பின் பலதுறைத் தொழிற்கல்லூரியில் 3.91 தரப்புள்ளிகளையும் பெற்ற இவர், மருத்துவப் படிப்பில் இடம் கிடைப்பதற்கான வாய்ப்பை அதிகப்படுத்திக் கொள்வதற்காக 'ஏ' நிலைத் தேர்வுகளையும் எழுதினார். ஆனால், அதில் நல்ல தேர்ச்சி நிலையைப் பெறவில்லை.

ஆயினும், திரு சானின் விண்ணப்பத்தை ஏற்று, 'தலைசிறந்த தனிமனிதர்' திட்டத்தின்கீழ் அவருக்கு மருத்துவம் பயில தேசிய பல்கலைக்கழகம் இடமளித்துள்ளது.

"தேசிய பல்கலைக்கழகத்திற்கு நன்றி சொல்ல வார்த்தைகளே இல்லை," என்கிறார் திரு சான்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.